

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு பெருவிழாவில்வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர் திருக்கோயில் 18 கோடி மதிப்பீட்டில் 207 அடி உயரம் உள்ள முருகன் சிலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினர். நிகழ்வில் இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் துறை ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம், ஈரோடு மண்டல இணை இயக்குனர் பரஞ்சோதி, கூடுதல் ஆணையாளர்கள் ஹர்ஷினி, நந்தகுமார், உதவி ஆணையர் சுகுமார், அருண்குமார், சந்திரன், செல்லத்துரை உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க.விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், பிப். 26 - தி.மு.க விவசாயிகள் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலய அரங்கில் நடைபெற்றது.

மாநில விவசாய அணி செயலாளரும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல்காதர், ஆர்.அருட்செல்வம், கள்ளிப்பட்டி மணி, ம.முத்து ராமலிங்கம், குறிஞ்சி.என்.சிவகுமார் மற்றும் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், வி.என்.மணி, தங்க சித்தார்தன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகள் தெரிவித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் உழவர் பெருமக்களின் நலன் காக்க எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத, வேளாண்மைக்கு தனி பட்ஜட் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, வேளாண்மை மற்றும் உழவர் 2025-2026ஆம் நலத்துறைக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 1.94 இலட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஆண்டிற்கான இடைக்கால நிதி ஒதுக்கீடாக ரூ.47.248.24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு முதலமைச்சர் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியைத் தெவித்துக் கொள்கிறது.

வெற்றிகரமான திராவிட மாடல் அரசு நடத்தும் நமது கழக தலைவர் அவர்களின் பிறந்தநாளான வரும் மார்ச்1ம் தேதி அன்று மிகவும் சிறப்பாகவும், அந்தந்த மாவட்டத்தில் விவசாயிகளும், பொது மக்களும் பயன் பெறும் வகையில் நலதிட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என விவசாயி அணியின் சார்பாக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பளார்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கின்றது.

தமிழ்நாடு பெண்களின் உரிமை தொகையை தேர்தலை காரணமாக வைத்து கிடைக்கபெறாமல் செய்ய வேண்டும் தொடர்ந்து கொடுக்காமல் நிறுத்தி விட வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்ட பாஜக ஒன்றிய அரசின் எண்ணத்தை முறியடிக்கின்ற வகையிலே தமிழகப் பெண்களின் உரிமை தொகையை உரியவர்களுக்கு விடிய ற்காலையில் மூன்று மாதங்களுக்குரிய 3000 ரூபாயும் மேலும் இன்ப அதிர்ச்சியாக கோடையின் ஊக்கத் தொகை ரூபாய் 2000 சேர்த்து 5000 ரூபாயாக ஐந்தாயிரத்தை இம் உரிய பெண்களின் சேமிப்பு கணக்கில் வரவு வைத்து இன்ப அதிர்ச்சி அளித்ததோடு, திராவிட மாடல் ஆட்சியின் தொடர்ச்சியாக வரும் ஆண்டுகளில் இத்தொகை மாதந்தோறும் ரூபாய் 2000 ஆக உயர்த்தி வழங்கப்பெறும் என எதிர் அணியினர் அத்தனை பேரும் அதிர்ந்த போகின்ற வகையில் அறிவிப்பை வெளியிட்ட நம் தலைவர் மற்றும் தமிழக முதல்வர் அவர்களுக்கு கழக விவசாய அணியின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

முதலமைச்சர் கழக தலைவர் அவர்களிடம் விவசாயிகளுக்கு கொண்டு வரும் நலத்திட்டங்கள் தமிழக விவசாயி களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் ஒன்றிய, பகுதி பேரூர் அமைப்புகளின் தி.மு.க. விவசாய அணியின் பொறுப்பாளர்கள் நியமனம் செய்த தலைவருக்கு இக்கூட்டம் நன்றி தெரிவிக்க கடமைபட்டுள்ளது.

தொகுதியிலும் நம்முடைய கழகம் வெற்றி பெற்று சாதனை படைத்திட நம்ம விவசாய அணியினர் அதற்காக கடுமையாக உழைத்து வெற்றி வாகை சூடவும் தலைவர் தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி தொடர அயராத பாடுபட வேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக நமது விவசாய அணிகள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றது.

திருச்சி மாநகரில் மார்ச் 09 அன்று நடைபெறும் மாநில மாநாட்டில் தி.மு.க விவசாயிகள் அணி சார்பாக பெறும் திரளாக கலந்து கொள்ளவேண்டும் நிறைவேற்றப்படுகிறது. எனக் கேட்டுக்கொண்டு தீர்மானம்.

இவ்வாறு மாநில விவசாய அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில்

# “வெல்லும் தமிழ் பெண்கள்” பிரச்சாரக் கூட்டம்!

## வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – மகாதேவி ஜெயபால் பங்கேற்பு!

பெரம்பலூர், பிப், 26 - “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பிரச்சாரம், பெரம்பலூர் ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சியில், பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ம.இராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு இந்த நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தலைமையில் வீடு, வீடாக சென்று தி.மு.க.அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, உதய சூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

க்யூ ஆர் கோடு மூலம் ஸ்கேன் செய்து, முதலமைச்சர் மு.க.க.ஸ்டாலின் அவர்கள் பேசும் வீடியோ மூலமும் பொதுமக்களிடம் சாதனைகளை எடுத்துக் கூறி துண்டு பிரசுரம் வழங்கி, “ஸ்டாலின் தொடரட்டும்” தமிழ்நாடு வெல்லட்டும்” எனும் ஸ்டிக்கர்கள் பசும்பலூர் ஊராட்சியில் உள்ள ஒவ்வொரு வீடுகள் தோறும் ஒட்டப்பட்டது.

இதில், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தா ர்த்தன், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், ஒன்றிய பொருளாளர் ஆர்.கலையரசன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், நகர் மன்ற உறுப்பினர் சித்தார்த், வழக்கறிஞர் செல்லையா, கிளைச் செயலாளர்கள் அழகேசன், இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேயர் கா.ரங்கநாயகி தலைமையில்

# கோவை மாநகராட்சி பட்ஜெட் கூட்டம்!

கோவை, பிப். 26 – கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற பட்ஜெட் கூட்டம் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், துணை ஆணையாளர்கள் அ.சுல்தானா, த.குமரேசன், மண்டல குழுத் தலைவர்கள் வே.கதிர்வேல் (வடக்கு), இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), ர.தனலட்சுமி (தெற்கு), கே.ஏ. தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), மீனாலோகு (மத்தியம்), நிலைக்குமுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ (கணக்குகள்), மாலதி நாகராஜ் (கல்வி & பூங்கா), பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்), வி.பி.முபசீரா (வரிவிதிப்பு & நிதி), சாந்தி முருகன் (பணிகள்), சோமு (எ) சந்தோஷ் (நகரமைப்பு), நிலைக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல உதவி ஆணையர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மாநில விவசாயிகள் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் மாநில செயலாளர் ஏ,கே.எஸ்.விஜயன் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல் காதர், ஆர்.அருட்செல்வம், கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராமலிங்கம், குறிஞ்சி.என்.சிவகுமார் மற்றும் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், வி.என்.மணி, தங்க சித்தார்தன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், தலைமையில் நடைபெற்ற ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை பொதுக் கூட்டத்தில் கழக நாடாளுமன்ற குழு துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார், பேரூர் கழக செயலாளர் என் தனபாலன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வாக்குறுதி கொடுத்ததை விட

# நெல்லுக்கு அதிக விலை கொடுத்தவர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விளக்கம்!



சென்னை, பிப்.26 - வாக்குறுதி அளித்ததை விட நெல்லுக்கு அதிக விலை கொடுத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று, சட்டப்பேரவையில் வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

உறுப்பினர் நயினார் நாகேந்திரன், நெல்லுக்கு விலை கொடுக்கவில்லை என்று சொல்கிறார். அவர் நெல் விவசாயி அல்ல; ஹோட்டல்காரர், நாங்கள் நெல் விவசாயிகள்.

முதலமைச்சர் அவர்கள், ரூ.2,500/- கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள், இப்போது ரூ.2,550/- கொடுக்கிறார்கள், ரூ.2,500/- கொடுக்கிறார்கள்.

கரும்பு விலைக்கு ஆக நீங்கள் - கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுவிட்டு இப்போது ஜெய்ப்பதுபோல் கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள்.

மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் உங்களுக்கு பதில் அளித்திருக்கிறார்கள். ஆக, இப்போது 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வெற்றி பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வந்து அமர்வார்கள்.

அவர் கூறிய எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அரியலூர் மாவட்டம்

# வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் புதிய பேருந்து வழித்தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், பிப், 26 - அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலம் சார்பில் தென்னூர் மாதவரம் பேருந்து நீட்டிப்பு மற்றும் விருத்தாச்சலம் தென்னூர் வரை நீட்டிக்கப்பட்ட வழித்தடத்தில் மகளிர் விடிய பயண பேருந்து சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்துகொண்டார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி,

வரதராஜன்பேட்டை பேரூராட்சியில், பேருந்து வழித்தடம் எண். 175A தென்னூரில் இருந்து வரதராஜன்பேட்டை, கவரப்பாளையம், ஆண்டிமடம், விருத்தாச்சலம், விழுப்புரம் வழியாக மாதவரம் வரையில் நீட்டிக்கப்பட்ட பேருந்து சேவையையும் மற்றும் விருத்தாச்சலம் தென்னூர் வரை நீட்டிக்கப்பட்ட வழித்தடத்தில் மகளிர் விடிய பயண பேருந்து சேவையையும் துவக்கி வைத்தார்.

புதிய வழித்தடத்தில் பேருந்து சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள், வேலைக்கு செல்வோர், வியாபாரிகள் உள்ளிட்ட அனைவரும் பேருந்து சேவையை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலம் பொது மேலாளர் எஸ்.பாண்டியன், அரியலூர் மண்டல துணை மேலாளர் ராம்குமார், ரவிச்சந்திரன்,

ஒன்றிய பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பேரூராட்சி செயலாளர் அல்போன்ஸ், பேரூராட்சி தலைவர் மார்கிரேட் அல்போன்ஸ், தொமுச திருச்சி மண்டல செயலாளர் குணசேகரன், மண்டல தலைவர் டி.சேகர், தொமுச தலைவர் கொளஞ்சி, தொமுச பொருளாளர் செல்வம்,

தொழிற்சங்க பிரதி நிதிகள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டம் ஊனவேலம்பட்டி பஞ்சாயத்து ஆணைகட்டிபாளையம் பகுதியில் பட்டு விவசாயிகள் நலன் கருதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 2 கோடியே 20 லட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்தை திறந்து வைத்து விவசாயிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை நாமக்கல் கிழகது மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார் பட்டு வளர்ச்சித் துறை இயக்குனர் சாந்தி, ஒன்றிய கழகச் செயலாளர் கேபி.ஜெகநாதன் மற்றும் துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.